8903
30 மே 2001

191

# தமிழ்நாடு அரசு

## சுருக்கம்

தொல்லியல் துறை - நினைவுச் சின்னங்கள் - விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் வட்டம், பெருமுக்கல் கிராமத்திலுள்ள முத்தியாலீஸ்வரர் கோவில் மற்றும் சீதா குகை - தமிழ்நாடு 1966 ஆம் ஆண்டு பழங்கால வரலாற்றுச் சின்னங்கள் - தொல்லியல் சிறப்பிடங்கள் - எஞ்சிய சின்னங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம 25/1966) 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (3) உட்பிரிவின் கீழ் அறிவிக்கை வெளியிடுதல் - ஏற்பளிக்கப்படுகிறது.

- - - - - - - - - - - - - - - - - - - - - - - - -

தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் (அதொ2) துறை.

அரசாணை (நிலை) எண். 263

நாள் 8.11.2001.
திருவள்ளுவராண்டு 2032
விசு ஐப்பசி 23.

பார்வை:

1) அரசாணை (நிலை) எண். 241, தமிழ் வளர்ச்சி பண்பாடு மற்றும் அறநிலையத் (அதொ2) துறை நாள் 26.7.2000.

2) தொல்லியல் துறை இயக்குநரின் கடித எண். ஆ1/4346/97 நாள் 20.2.2001.

- * -

**ஆணை:**

பார்வை-1-ல் காணும் அரசாணையின்படி தொல்லியல் துறை நினைவுச் சின்னங்கள், விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் வட்டம், பெருமுக்கல் கிராமத்திலுள்ள முத்தியாலீஸ்வரர் கோவில் மற்றும் சீதா குகை ஆகியவற்றை பாதுகாக்கப்பட்ட நினைவுச் சின்னமாக தமிழ்நாடு 1966 ஆம் ஆண்டு பழங்கால வரலாற்றுச் சின்னங்கள், தொல்லியல் சிறப்பிடங்கள், எஞ்சிய சின்னங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 25/1966) 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின்கீழ் அறிவித்து முன்னோடி அறிவிக்கை வெளியிடப்பட்டது. மேற்படி சின்னத்தை தொல்லியல் துறையின் கீழ் பாதுகாப்பது குறித்து பொதுமக்களிடமிருந்து எவ்வித மறுப்பும் தொல்லியல் துறை மற்றும் அரசிடம் பெறவில்லை. எனவே, மேற்படி சின்னத்தை தமிழ்நாடு 1966 ஆம் ஆண்டு பழங்கால வரலாற்று சின்னங்கள் தொல்லியல் சிறப்பிடங்கள், எஞ்சிய சின்னங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 25/1966) 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (3)-வது உட்பிரிவின்கீழ் "பாதுகாக்கப்பட்ட சின்னமாக" முடிவு அறிவிக்கை வெளியிடுமாறு இயக்குநர் அரசை வேண்டியுள்ளார்.

2. தொல்லியல் துறை இயக்குநரின் செயற்குறிப்பினை ஏற்று, தமிழ்நாடு 1966 ஆம் ஆண்டு பழங்கால வரலாற்றுச் சின்னங்கள், தொல்லியல் சிறப்பிடங்கள், எஞ்சிய சின்னங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 25/1966) 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (3)வது உட்பிரிவின்கீழ் வரைவு அறிவிக்கையின் மீது அரசு ஒப்புதல் வழங்குகிறது.

3. இந்த ஆணையுடன் இணைக்கப்பட்ட அறிவிக்கை தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படும்.

4. இந்த ஆணையுடன் இணைக்கப்பட்டுள்ள அறிவிக்கை தமிழ்நாடு அரசிதழில் அடுத்த வெளியீட்டில் வெளியிடுமாறு சென்னை அரசு மைய அச்சகத்தின்

....2.

பணிமேலாளர் கேட்டுக்கொள்ளப்படுகிறார். மேலும் வெளியிட்ட அரசிதழின் 5 பிரதிகளை அரசுக்கும் மற்றும் தொல்லியல் (ம) அருங்காட்சியக ஆணையர் அவர்களுக்கும் அனுப்பி வைக்குமாறு அரசு மைய அச்சகத்தின் பணி மேலாளர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

பி.ஏ. இராமையா
அரசு செயலாளர்

பெறுநர்

பணி மேலாளர்,
அரசு மைய அச்சகம், சென்னை-79.
(தமிழ்நாடு அரசிதழில் வெளியிடுவதற்காக)
ஆணையர், தொல்லியல் மற்றும் அரசு அருங்காட்சியகத் துறை,
தரமணி, சென்னை-113.
மாவட்ட ஆட்சித் தலைவர், விழுப்புரம்.

நகல்:
தலைமைப் பொறியாளர் (கட்டிடம்) பொதுப்பணித்துறை, சென்னை-5.
பொதுப்பணித்துறை, சென்னை-9.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.

ராச/1311

125

இணைப்பு

அறிவிக்கை

கீழ்க்காணும் விவர அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பழங்காலச் சின்னத்தை தமிழ்நாடு 1966 ஆம் ஆண்டு பழங்கால வரலாற்றுச் சின்னங்கள்- தொல்லியல் சிறப்பிடங்கள், எஞ்சிய சின்னங்கள், சட்டத்தின்படி (தமிழ்நாடு சட்டம் 25/1966) பாதுகாக்கப்பட வேண்டியது அவசியம் என்று அரசு கருதுகிறது.

ஆகவே, தற்போது மேற்கூறிய சட்டத்தின் 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களால், தமிழ்நாடு ஆளுநர் அவர்கள், மேற்கூறிய பழங்காலச் சின்னத்தைப் பாதுகாக்கப்பட்ட நினைவுச் சின்னமாக அறிவிக்கத் தாம் கருதுவதாக குறிப்பிட்டு, இதற்கு இரண்டு மாத கால அவகாசம் அளிக்கிறார்.

இந்த அறிவிக்கை தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படும் நாளன்றும், அந்நாள் முதற்கொண்டும், மேற்கூறிய இரண்டு மாத காலம் முடிவடைந்த பின்னர் மேற்கூறிய செயற்குறிப்பு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். மேற்கூறிய பழங்காலச் சின்னங்களில் பற்றுள்ள எவரிடமிருந்தும், இரண்டு மாதக் காலம் முடிவடைவதற்கு முன்னர் வரப்பெறும் மறுப்புரைகள் எதனையும் தமிழ்நாடு அரசு கருதிப் பார்க்கும். மறுப்புரைகள் எவையேனும் இருப்பின், அவற்றை, "அரசு செயலாளர்", தமிழ் வளர்ச்சி- பண்பாடு மற்றும் அறநிலையத்துறை, சென்னை-9" என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

<u>விவர அட்டவணை</u>

| | | |
|---|---|---|
| 1. | மாநிலம் | : தமிழ்நாடு |
| 2. | மாவட்டம் | : விழுப்புரம் |
| 3. | வட்டம் | : திண்டிவனம் |
| 4. | கிராம எண். | : 145 |
| 5. | கிராமம் | : பெருமுக்கல் |
| 6. | நினைவுச் சின்னத்தின் பெயர் | : முக்தியாலீஸ்வரர் கோயில் மற்றும் சீதா குகை. |
| 7. | அமைவிடம் | : திண்டிவனம்- மரக்காணம் சாலை |
| 8. | நினைவுச்சின்னம் அமைந்துள்ள ம.நி.அ.எண். | : சர்வே எண். 266. |
| 9. | மொத்தப் பரப்பளவு | : 39-71.5 ஹெக்டேர் |
| 10. | பாதுகாக்கத் தேவைப்படும் மொத்தப்பரப்பு. | |
| | அ. ம.நி. அ.எண். | : சர்வே எண். 266 |
| | ஆ. பரப்பு | : 5780 ச.மீட்டர். |

௫.

11. எல்லைகள்:

| திசை | கிழக்கு | மேற்கு | தெற்கு | வடக்கு |
|---|---|---|---|---|
| ம.பு.அ.எண். | 266/3 | 266/3 | 266/3 | 266/3 |

உரிமைத்தரவம் : அரசு புறம்போக்கு

12. கிணத்தை அடைய தேவைப்படும் பாதை

அ. ம.பு.அ.எண். .. 266

ஆ. பரப்பு .. சுமார் ½ கி.மீ. நீளம்)

இ. உரிமைத்தரவம் ... அரசு புறம்போக்கு

ச. [illegible]
அரசு செயலாளர்.

/ஆணைப்படி/அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.